IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CC.NO.12/2023

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | KULASEKARAN |
| FATHER NAME | : | RAJENDHIRAN |
| VILLAGE | : | KALLAPADI |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 16 th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கல்லப்பாடியில் வசித்து பைனாஸ்சில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் ஆவார். அ.சா.1 எனது மனைவி ஆவார். கடந்த 17.04.2022ம் தேதி மதியம் 2 மணியளவில் எனது மனைவி வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி ராஜேஸ்வரி என்பவர் ஏற்கனவே எங்களுக்கும் அவருக்கும் பாத்ரூம் கட்டுவது சம்மந்தமாக இருந்த முன்விரோதம் காரணமாக எனது மனைவியிடம் பிரச்சனை செய்து எனது மனைவியை கட்டையால் அடித்ததாகவும் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்திருப்பதாகவும் போன் மூலமாக எனது மனைவி தகவல் சொன்னார். நான் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

CC.NO.12/2023

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | ESHWARI |
| HUSBAND NAME | : | KULASEKARAN |
| VILLAGE | : | KALLAPADI |
| OCCUPATION | : | COOLIE |
| AGE | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 16 th day of July 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கல்லப்பாடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர். கடந்த 17.04.2022ம் தேதி மதியம் 2 மணியளவில் நான் கல்லப்பாடியில் உள்ள எனது வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி ராஜேஸ்வரி என்பவர் ஏற்கனவே எனக்கும் அவருக்கும் பாத்ரூம் கட்டுவது சம்மந்தமாக இருந்த முன்விரோதம் காரணமாக என்னிடம் பிரச்சனை செய்து எனது இடதுபக்க கழுத்திலும், இடது கையிலும், இடது காலிலும் கட்டையால் அடித்தார். நான் உடனே கல்லப்பாடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். மறுநாள் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது பரதராமி காவல்நிலைய போலீசார் என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,

Judicial Magistrate,
Gudiyatham.